மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 40/2021

பெயர் – கண்ணன் (வா.சா.1)

நாள் – 12.04.2023

பிரதிவாதி தரப்பில் கு.வி. தொடர்ச்சி

18.4.2021ம் தேதி முதல் தாவா கடை பூட்டியே உள்ளது என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருப்பதால் பூட்டி உள்ளது. 18.4.2021 முதல் தாவா கடை எனது பொறுப்பில் இல்லை என்றால் சரியல்ல. என் பொறுப்பில் தான் உள்ளது. தாவா கடை 18.4.2021 முதல் என் பொறுப்பில் தான் உள்ளதை காண்பிப்பதற்கான ஆவணங்களை ஏதேனும் உள்ளதா என்றால் பொருட்களை முருகேசன் திருடி சென்றுவிட்டதால் வழக்கு விசாரணை வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.77/21 ஆக நிலுவையில் உள்ளது. 18.4.2021 முதல் தாவா கடை பூட்டப்பட்டு வச்சகாரப்பட்டி காவல் நிலைய பொறுப்பில் உள்ளது என்றால் சரியல்ல. விசாரணைதான் நிலுவையில் உள்ளது. சாத்தூர் சார்பு நீதிமன்ற ஓஎஸ் 108/21 என்ற வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் சாத்தூர் சார்பு நீதிமன்றம் ஓஎஸ்.108/21 அளித்த சாட்சியத்திற்கான சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 18.4.2021 தேதிக்கு பிறகு நான் வைத்திருந்த கடை என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்றால் தற்போது வச்சக்காரபட்டி காவல்நிலைய கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது என்று சாட்சியம் அளித்திருக்கிறார் என்றால் சரிதான். 19.4.2021ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு தற்போதுவரை குற்றஇறுதி அறிக்கை நிலுவையில் உள்ளது. குற்ற எண்.77/2021 வழக்கானது பொய்யானது என்பதால் தற்போது வச்சகாரப்பட்டி காவல்துறையினரால் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அப்போது பணியில் இருந்த ஆய்வாளர் கருப்பசாமி ஒருவருட காலமாக நிலுவை வைத்து தற்போது உள்ள ஆய்வாளர் ராமராஜ் அந்த வழக்கை விசாரித்து வருகிறார். வச்சகாரப்பட்டி காவல்துறை ஆய்வாளர் ராமராஜை விசாரித்தால் நான் சொல்லும் விவரம் உண்மையா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமான உணவு பாதுகாப்பு அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழ் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். 3

வருடமாக வழக்கு நடந்துவருவதால் ரத்து செய்யப்பட்டது. கடையை நடத்துவதற்கும் லைசென்சை ரத்து செய்வதற்கும் நீதிமன்றத்தில் தடை உத்தரவு எதுவும் இல்லை என்றால் சரிதான்.ஏனெனில் அது தேவை யில்லை. தாவா கடைக்கு மின் இணைப்பு 18.4.2021ல் இருந்து இல்லை என்றால் சரிதான். தாவா கடையை 18.4.2021 தேதியில் எனது அடியாட்களை வைத்து எனது கடையை அடித்து நொறுக்கிவிட்டு அன்றைய தேதியில் பிரதிவாதியிடம் கடையை ஒப்படைத்து விட்டு வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரயில்ல. வச்சகாரப்பட்டி காவல் துறையினரால் சிசி டிவி பதிவுகளைஎடுத்து முருகேசன் மற்றும் அவரது மகன் ஒருமாதகாலமாக தலைமறைவாக முன்ஜாமின் பெற்று வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தனர். நான் சொல்வது போல் முருகேசன் அவரது மகனும் தலைமறைவாகவில்லை என்றாலும் முருகேசன் தென்காசியில் மருத்துவசிகிச்சை பெற்று வந்தார் என்றாலும் அவருக்கு உதவியாக அவரது மகன் இருந்துவந்தார் என்றாலும் சரியல்ல. 18.4.2021 தேதியில் தாவா கடையை நானே அடித்து நொறுக்கிவிட்டு பிரதிவாதி வசம் தாவா கடையை ஒப்படைத்த விவரத்தை பி.வா.சா.ஆ.1 ஆவணமான அறிவிப்பில் சொல்லப்பட்டும், அந்த விவரம் உண்மை என்பதால்தான் மறுத்து நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 18.4.2021 ல் இருந்து தாவா கடை ஒருபோதும் என்வசம் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் 18.4.2021 ம் தேதியில் இருந்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கு 18.4.2021ல் இருந்து நிலுவையில் இருந்து வருகிறதா என்றால் கோர்ட் விடுமுறையாக இருந்ததால் உடனடியாக தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டவுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் பிரதிவாதி முருகேசனுக்கு ஒருபோதும் ரூபாய் பத்துலட்சம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பத்துலட்சம் கொடுக்காத காரணத்தினால் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 18.4.2021 முதல் தாவா கடை என் பொறுப்பில் இல்லாத காரணத்தினால் தான் சார்பு நீதிமன்றத்தில் ஒருவிதமாகவும், இந்த வழக்கில் ஒருவிதமாகவும் சாட்சியம் அளித்துவருகிறேன் என்றால் சரியல்ல. குற்ற

வழக்கு நிலுவையில் இருப்பதால் கடை நடத்த முடியவில்லை. சாத்தூரில் நடந்த பங்குனி பொங்கலில் எனது புகைப்படத்தை அச்சு அடித்து முதல் நாள் மறவர் மண்டகப்படிக்கு அந்த மண்டகப்படி நிர்வாகிகளுடன் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இந்த வருடம் மட்டும் அல்ல 10 வருடமாக அவ்வாறு போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது. நான் மறவர் இனத்தை சேர்ந்தவரா என்றால் இல்லை. ஆனால் எனது அக்காவின் கணவர் மறவர் இனத்தை சேர்ந்தவர் உறவினர் அடிப்படையில் ஒட்டப்பட்டது. நான் அந்த நிர்வாகிகளை பயன்படுத்தி கட்ட பஞ்சாயத்து செய்வதற்காகத்தான் அவ்வாறு போஸ்டர் ஒட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் ஊரில் ஜான்பாண்டியன் அடியாட்களை வைத்து கடையை உடைத்ததாக கூறிவருகிறார். ஆனால் முருகேசன் தான் கடையை தாக்கல் நடத்தினர். கலவரம் ஏற்படுத்தி வருவதற்காக அவ்வாறு சொல்லிவருகிறார். நான் சொல்லும் ஜான்பாண்டியன் என்பவரும் முருகேசன் என்பவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறறேன் என்றால் சரயில்ல. முருகேசனின் போன் தொடர்புகளை பார்த்தால் அது தெரியவரும். 18.4.2021 முதல் தாவா கடை என் பொறுப்பில் இல்லாத காரணத்தினால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 3 மாதங்களுக்குள் வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் உள்ள வழக்கை மாண்பமை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவ்வாறான மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறான உத்தரவு எதுவும் இல்லாத காரணத்தினால் தான் அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த உத்தரவு வச்சக்காரப்பட்டி காவல்நிலையத்திற்கு நீதிமன்றம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. எந்த நீதிமன்றம் மூலமாக அனுப்பபட்டுள்ளது என்றால் மாண்பமை மதுரை உயர் நீதிமன்றம் மூலம் அனுப்பப்பட்டுளள்து. அந்த மனு எண் பற்றி இந்த வழக்கில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சாத்தூர் நீதித்துறை நடுவர் எண்.2ல் இருந்த பிரதிவாதியால் என்மீது தாக்கல் செய்யப்பட்ட சிசி.26/2021 வழக்கில் எனக்கு 6 மாத கால சிறைதண்டனை விதிக்கப்பட்டு நான் மேல்முறையீடு செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் கடையில் இருந்து திருடப்பட்ட காசோலை களை வைத்து அவசர அவசரமாக அந்த வழக்கு தவறாக

தாக்கல் செய்யப்பட்டது. மாண்பமை சாத்தூர் சார்பு நீதிமன்ற ஓஎஸ் 108/21 வழக்கில் நான் பிரதிவாதிக்கு ரூ5,19,383/–ஐ வட்டியுடன் செலுத்தவேண்டும் என கடந்த 10.4.2023 தேதி தீர்ப்பாகி உள்ளது. ஆனால் லட்சுமி தேவி என்பவர் மூலமாக முருகேசன் அந்த வழக்கை பொய்யாக பவர் பெற்று அந்த வழக்கை தாக்கல் செய்தார். நான் ஒரு நீதிமன்ற பறவை என்றாலும் தாவா சொத்து என் வசம் இல்லை என்று நன்கு தெரிந்தும், வழக்கு நிலுவையில் இருக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த பொய் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கும் பிரதிவாதியால் 2 வருடமாக காலதாமதபடுத்தி வருகிறார்.

மறுவிசாரணை – இல்லை.